ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :28 October 2025
கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**



# தமிழ்

# *Medicinal Values in Thirukkural*

***Dr. Salma Mahajabeen T M ,*** *Associate Professor, Department Of Tamil And Research Centre. Govt. College , Chittur. Plakkad, Kerala .*

***Abstract***

*Thirukkural is a special book, which is considered as the Tamil Veda. This book has been translated into many world languages, and its ideas are known worldwide. This book, which appeared during the Sangam period (300-600 AD), embodies Jain ideas and serves as a guide for the people. The teachings contained in this book are essential for human well-being and moral life.In this way, issues related to mental and physical illness are explained directly and indirectly in this book. Valluvar is a religious saint.Therefore, it is an undeniable fact that he also had the art of medicine. He is outwardly seen as a psychiatrist. When we look closely at chapter 95, 'Medicine', Valluvar is well versed in medical philosophies.*

***Keywords:*** *Moral Age - Mental Illness - Physical Illness - Basic Philosophies - Siddha Ayurvedic Medicine*

## திருக்குறளில் மருத்துவச் செய்திகள்

**முனைவர் சல்மா மஹஜபீன் த. மு**, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம் சித்தூர் அரசுக்கல்லூரி. பாலக்காடு. கேரளா 678104

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழ்வேதம் எனப்போற்றப்படும் சிறப்பு வாய்ந்த நூல் திருக்குறள். இந்நூல் உலகமொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டு, இதன் கருத்துக்கள் உலகளாவிய நிலையில் அறியப்பட்டு வருகின்றன. சங்கமருவிய காலத்தில் (கி. பி. 300-600) தோன்றிய இந்நூல், சமணசமயக் கருத்துக்களை உள்ளடக்கி, மக்களுக்குரிய வழி காட்டி நூலாகத் திகழ்கிறது. மனிதனின் சுகவாழ்வுக்கும் அறவாழ்வுக்கும் இன்றியமையாத போதனைகளே இந்நூலிற் கூறப்பட்ட விடயங்களாகும். இவ்வகையில் உளப் பிணி உடற்பிணி சார்ந்த விடயங்கள் இந் நூலிலே நேர்முகமாகவும் மறைமுகமாகவும் விளக்கப்பட்டுள்ளன. வள்ளுவர் ஒரு மதத்துறவி. எனவே அவருக்கு வைத்தியமும் கைவந்தகலை என்பது மறுக்க முடியாத உண்மை. அவர் உளப்பிணி மருத்துவராகவே புறத்தோற்றத்தில் காணப்படுகின்றார். 95 ஆம் அதிகாரமாகிய 'மருந்து'என்பதைக் கூர்ந்து நோக்கும் போது வள்ளுவர் மருத்துவ தத்துவங்களை நன்கு அறிந்தவர் **திறவுச்சொற்கள்:** அறநெறிக்காலம்- உளப்பிணி — உடற்பிணி- அடிப்படைத் தத்துவங்கள்- சித்த ஆயுர்வேத மருந்து

**முன்னுரை- *Introduction***

தமிழிலக்கிய வரலாற்றாசிரியர்கள் சங்கம் மருவிய காலத்தை அறநெறிக்காலம் என்றும் கூறுவர். அறநெறிக்காலத்தில் வாழ்ந்த சமண, பௌத்தத் துறவிகளின் இலக்கியங்கள் உளப்பிணிக்கும் உடற்பிணிக்கும் மருத்துவஞ் செய்யும் மருத்துவ நூல்களாகவே காணப்படுகின்றன.சமயம் போதிக்கவந்த இத்துறவிகள் கல்வி, மருத்துவம், உணவு. உடை, உறையுள் என்பனவற்றை மக்களுக்கு வழங்கினர். தாம் இயற்றிய நூல்களிலே மருத்துவக்கருத்துக்களுக்கும் ஏற்றம் கொடுத்தனர். அக்காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க் கணக்கு நூல்களிலே மருத்துப் பெயர்களைக் கொண்டனவாகத் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் என்ற இலக்கியங்கள் தோன்றலாயின. மருத்துவர்களது மருத்துவக்கோட்பாடுகளும் மருத்துவ முறைகளும் அக்காலப் பகுதியில் தமிழர் மத்தியிற் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருப்பதைக்கண்ட மதத்துறவிகள், தாம் சொல்லவந்த சமயக் கருத்துக்களை மருந்துப் பெயர்களைத் துணைக்கொண்டே பிரச்சாரம் செய்தனர்.

**உளப்பிணி உடற்பிணி மருத்துவர் - *Psychiatrist***

வள்ளுவர் உளப்பிணி மருத்துவர். உளப்பிணி மருத்துவர்களுக்கு உடற்பிணி மருத்துவமும் தெரிந்திருப்பதில் வியப்பில்லை. உடலும் உளமும் சார்ந்த நோய்களைக் கண்டறிந்து, அவற்றிற்குரிய மருத்துவ முறைகள் பற்றி பண்டைய மருத்துவ ஞானிகள் விளக்கம் தந்துள்ளனர். சங்கம் மருவிய காலத்திலே சீரழிந்திருந்த சமூகத்தைச் சீர்திருத்த முற்பட்ட சமூகப்பிணி மருத்துவருள் வள்ளுவர் தலைசிறந்தவர். எனவே வள்ளுவர் சமூகப்பிணி, உடற்பிணி, உளப்பிணி மருத்துவம்பற்றிக் கூறவேண்டியவராகின்றார். அந்த வகையில் அமைந்த நூலே திருக்குறள்.

தமிழிலக்கியங்களிலே மருத்துவம் பற்றிய எண்ணக்கருத்துக்களைச் சங்கமருவிய காலத்திலேயே முதன்முதலாக விரிவாகக் காணக்கூடியதாகவுள்ளது. இக்காலப்பகுதியில் எழுந்த நூல்களிற் சில சித்த, ஆயுர் வேத மருத்துவங்களிற் கையாளப்படும் முக்கிய கூட்டுமருந்துச் சரக்குகளான ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம் முதலியவற்றின் பெயரைத்தாங்கி வெளிவந்துள்ளன. இந்நூல்கள் அறத்தைப் போதிப்பதற்காக எழுந்தவை. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், என்பதை மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு வள்ளுவர் மருந்து 'பற்றித் தனி அதிகாரம் படைத்து மருத்துவத்துக்குச் சமூகத்தில் சிறப்பான இடம் கொடுத்துள்ளார்.

**அடிப்படைத் தத்துவங்கள் — *Basic Philosophy***

வள்ளுவர் கூறும் மருந்தியல் அதிகாரத்தை (பொருட்பால் 95ஆம் அதிகாரம்) கூர்ந்து நோக்கும்போது, அதிற் கூறப்பட்டுள்ள அரிய கருத்துக்களிற் பல சித்த, ஆயுர்வேத

மருத்துவமுறைகளின் அடிப்படைத் தத்துவங்களாக (Fundamental Doctrines) அமைந்திருப்பதைக் காணலாம். பல்வகைச் சக்திகள் பெற்றது உயிர். இந்த உயிர் சக்திகளின் செயல்களே வாத, பித்த, கபம் எனப்படுவன. இச்செயல்கள் மாறுபடும்போதே நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றின் செயல்கள் மாறுபடாதிருக்கும் வகையில் மேற்கொள்ளும் நடவடிக்கையே மருத்துவம் என்பர்.

உடலின் சுகநிலைக்கு இம்மூன்று காரணிகளும் (வாத, பித்த,கபம்) சமநிலையில் இருத்தல் அவசியமாகும். இவற்றுள் ஒன்று, அல்லது இரண்டு, அல்லது மூன்றும் அவற்றின் இயல்பான தொழிற்பாட்டில் கூடினாலும் அல்லது குறைந்தாலும் நோய் ஏற்படும் என்று சித்த மருத்துவ நூல்கள் கூறுகின்றன. இதே கருத்தையே வள்ளுவரும் மருந்து என்ற அதிகாரத்தின் முதலாவது குறளில் விளக்கியுள்ளார்.

"மிகினும் குறையினும் நோய் செய்யும்

நூலோர் வளி முதலா எண்ணிய மூன்று " (குறள் 941)

இங்கு வளிமுதலா' என்பது வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் என்று பொருள்படும். மேலும் நூலோர் எண் ணிய மூன்று என்று வள்ளுவர் கூறியிருப் பது கவனிக்கத்தக்கது. மருத்துவ நூல்களை எழுதியவர்களின் கருத்து இது என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கூற்று வள்ளுவரின் சொந்தக் கருத்தாக அமையாமல், பிற மருத்துவ நூல்களிலிருந்து அவர் எடுத்தாண்ட கருத்தாக அமைவதையும் காணலாம். எனவே, வள்ளுவர் காலத்திலும் அதற்கு முன்னருங்கூட மருத்துவநூல்கள் தமிழ்நாட்டில் இருந்திருக்கின்றன என்ற உண்மையும் இக்குறள் மூலம் பெறப்படுகின்றது.

நோய் ஏற்பட்டு அவஸ்தைப்படுவதைக் காட்டிலும் வருமுன் காப்பதே சிறந்தது என்பது வள்ளுவர் கருத்தாகும். இயற்கை மருந்துகளான ஒழுக்கம், உணவுக்கட்டுப் பாடு என்பவற்றைப்பற்றியும் அவர் அதிக அக்கறையுடன் எடுத்துக் கூறியுள்ளார்.

முன் உண்ட உணவு நன்கு செமித்துவிட்டதா என்பதை அறிந்து, அதன்பிறகு மாறு உணவை, அளவாக உட்கொள்ளவேண்டும். உடலிலுள்ள பசித்தீ (Enzymes) எப்பொழுதும் ஒரேயனவாக இருப்பதில்லை. அவை சில வேளை கூடியும், சிலவேளை குறைந்தும் காணப்படும். மேலும் ஒரு மனிதனின் பிரகிருதிக்கு ஏற்றபடி பசித்தீ யானது இயல்பாகவே (Normal

*Conditions)* குறைந்தளவிலேயோ அல்லது கூடியளவிலேயோ இருக்கும். எனவே, இவற்றைச் சரிவர ஆராயாமல் மிகுதியாக உட்கொண்டால் அதன் விளைவாகப் பலவிதநோய்கள் ஏற்படும் என்கிறது தமிழ் மருத்துவம். இதனை வள்ளுவர் பின்வரும் குறளில் விளக்குகின்றார்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.(குறள்: 942)

இவ்விதம் உணவுக் கட்டுப்பாட்டைச் சரிவர மேற்கொண்டால் ஒரு மனிதனுக்கு நோய் ஏற்படாது; அவனுக்கு மருந்தும் தேவைப்படாது என்று கூறும் வள்ளுவர் நீடித்த ஆயுள், மன சந்தோஷம் என்பனவும் உணவுக்கட்டுப்பாட்டின்மூலம் கிடைக்கும் என்கிறார்.

உணவுக் கட்டுப்பாடுகளைச் சரிவர மேற் கொள்ளாவிடினும் அல்லது கர்மவினை காரணமாகவும் ஒரு மனிதனுக்கு நோய் ஏற்படலாம். நோய்வரின் மருத்துவனை அணுக வேண்டியது அவசியமாகும். அவ்விதம் வரும் நோயாளிக்கு முற்படவேண்டும் என்பதை போதிக்கிறார் வள்ளுவர். எவ்விதம் மருத்துவனுக்கு சிகிச்சையளிக்க இக்குறள்களில்

"நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (குறள் 948)

நோய்க்கான கொண்டு அந்நோய் குணங்குறிகளைக் இன்னதென்று அறிந்து, அந்த நோய்க்கான காரணங்களைக் கண்டறிந்து, நோயாளியின் உபத்திரவங்களை வாயாற் கேட்டறிந்து, அந்த நோயைத் தணிப்பதற்கான முறைகளை ஆராய்ந்து, நோயாளியின் உடலுக்குப் பொருந்தும்படி சிகிச்சையளிக்கவேண்டும்.

### சித்த ஆயுர்வேத மருந்து — *Sidhdha Ayurvedic Medicine*

வள்ளுவர் குறளின் மருந்து அதிகாரத்தில் சித்த ஆயுர்வேத மருத்துவங்களிற் கூறப்பட்டுள்ள அடிப்படைக் கருத்துக்களை எடுத்துக்கூற முற்பட்டுள்ளதை நோக்கு மிடத்து. அந்நூல் தோன்றிய சங்கமருவிய காலத்தில் தமிழகத்தில் சித்த, ஆயுர்வேத மருத்துவங்கள் சிறந்து விளக்கியிருக்க வேண்டும் என்று கருதக்கூடியதாகவுள்ளது. சங்கம் மருவிய காலத்தில் தமிழகத்தில் ஆரியர் வருகை அதிகரித்தமையால் அவர்களுடன் ஆயுர்வேத வைத்தியமும்

தமிழகத்தில் பரவியிருக்கவேண்டும். எனவே, தமிழகத்துக்கேயுரிய சித்த மருத்துவத்துடன், ஆயுர்வேத மருத்துவமும் அக்காலத்தில் தமிழக மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்கியிருக்கக்கூடும். அறத்தைப் போதிக்க முற்பட்ட வள்ளுவர், மக்கள் அறவாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமானால், பிணியற்ற வாழ்வு அவசியம் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். இந்திய மருத்துவங்களின் அடிப் படைத் தந்துவங்களால் கவரப்பட்ட வள்ளுவர் அவற்றைப்பற்றித் தம் குறளில் கூற விரும்பி 'மருந்து' என்னும் தனி அதிகாரத்தையே அதற்காகப் படைத்துள்ளார்.

மருந்து' என்ற அதிகாரத்தில் மட்டு மன்றி. ஏனைய அதிகாரங்களில் ஆங்காங்கே வள்ளுவர் கூறியுள்ள பல கருத்துக்கள், இந்திய மருத்துவ நூல்கள் கூறும் கருத்துக்களுடன் ஒத்திருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. மக்களின் நல்வாழ்வுக்கு ஒழுக்கம் அவசியம் என வள்ளுவர் வலியுறுத்தியிருப் பதை இந்திய மருத்துவநூல்களிலும் காணக் கூடியதாகவுள்ளது. மதுப்பழக்கத்திற்கு ஆட்பட்ட ஒருவரை சமூகம் வெறுத்து ஒதுக்குகின்றது. அத்துடன் அவர் நோய் வாய்ப்பட்டு மரணகதிக்குச் செல்லவேண்டிய வராகின்றார். அதனாலேயே சமய இலக்கி யங்கள் மதுவை வெறுத்துரைக்கின்றன. ஒழுக்கத்தைச் சீரழிக்கும் மதுவை அறநூல் கள் மிகவும் தீவிரமாகக் கண்டித்துள்ளன. வள்ளுவரும் கள்ளுண்ணாமை எனும் ஒரு தனி அதிகாரத்தை (93) அமைத்து மக்களுக்கு மதுப்பழக்கத்தினால் ஏற்படும் தீமையை விளக்கலானார். கள்ளுண்ணாமை சமூக மருத்துவத்தின் பாற்பட்டதாகும். கள்ளின் கெடுதியை விளக்க பின்வரும் குறள் ஒன்றே போதும் என எண்ணத் தோன்றுகின்றது.

"ஈன்றாள் முகத்தேயும் இன்னதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி" (குறள் - 923)

இந்திய மருத்துவ நூல்களும் மது அருந்துவதை வெகுவாகக் கண்டித்துக் கூறியுள்ளதுடன் அதனால் ஏற்படும் பலவித நோய்களையும் எடுத்துக்கூறி அவற்றிற்கான சிகிச்சை முறைகளையும் விளக்கியுள்ளன. அஷ்டாங்க ஹிருதயம் 'என்னும் நூலில் மது உண்டவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய சிகிச்சை பற்றித் தனிஅதிகாரத்தில் கூறப் பட்டிருப்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

கோபங் கொள்ளாதே மனமே " என்று கடுவெளிச்சித்தர் பாடினார்.

சினம் கூடாது என அறங்கள் போதிக்கின்றன. நவீன மருத்துவ நூல்களும் சினங்காத்தல் அவசியமென்பதை வற்புறுத்துகின்றன. சினங்கொள்வதன்மூலம் உடல், உளநோய்களாற்

பாதிப்புறுகின்றது. அதனாலேயே வள்ளுவரும் பின்வரும் குறள்களில் வெகு ளாமைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்:

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் " (குறள் 305)

வள்ளுவர் தம் நூலிலே இனியவை கூறல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, தீவினை அச்சம், வாய் மை வெகுளாமை, உட்பகை, வரைவின் மகளிர் முதலிய அதிகாரங்களிலே கூறுகின்ற விடயங்களை உற்று அவதானிக்கும்போது ஆங்கு உடற்பிணி உளப்பிணி சார்ந்த விட யங்களையே கூறியிருத்தலைக் கண்டுகொள்ளலாம்.

**முடிவுரை**

எனவே, மருந்து என்ற தனி அதி காரத்தில் மட்டுமன்றி, ஏனைய அதிகாரங்களிலும் வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்கள் பலவற்றிற்கும் இந்திய மகுந்துவ நூல்களிற் கூறப்பட்டுள்ள கருத்துக்களிற்கும் பெருமளவு ஒற்றுமை இருப்பது புலப்படுகின்றது. இந்திய மருத்துவமானது இந்திய மக்களின் வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையாகும். எனவே, இந்திய மக்களின் அறவாழ்க்கையை எடுத்துக் கூற முற்பட்ட வள்ளுவரின் குறள்களிலும் மருத்துவக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளமை இயல்பானதே. மருந்து அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் இந்த பத்து பாடல்களையும் புரிந்துகொண்டு வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போது வாழ்நாள் முழுமைக்கும் எந்த நோயும் அண்டாமல் ஆரோக்கியமாக வாழலாம்.

**பார்வை நூல்கள்**

1. ந. சுப்ரமண்யன், திருக்குறட் கட்டுரைகள், என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், உடுமலைப்பேட்டை, 2004.

2. அ. சக்கரவர்த்தி நயினார், திருக்குறள் வழங்கும் செய்தி . மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2003.

3. சாமி சிதம்பரனார், வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2001.

4. மு. சதாசிவம், வள்ளுவர் உள்ளமும் வாழ்க்கைத் தத்துவங்களும், மணிவாசகர் பதிப்பகம், 004.

*References;*


*1. N. Subramanian, Thirukkural Articles, Enness Publications, Udumalaipettai, 2004.*

*2. A. Chakravarthy Nainar, News from Thirukkural. Meiyappan Publishing House, Chidambaram, 2003.*

*3. Sami Chidambaranar, Tamil Nadu where Valluvar lived, Manivasagar Publishing House, Chennai, 2001.*

*4. M. Sadasivam, Valluvar's Soul and Philosophy of Life, Manivasagar Publishing House, 2004.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com